


கோவை வ.உ.சி மைதானத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கபட்டிருந்த அரசு பொருட்காட்சியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாவட்டச் செயலாளர்கள் சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், தொண்டாமுத்தூர் அ.ரவி, மாநகர காவல் ஆணையர் சரவணசுந்தர், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமசந்திரன், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுருபிரபாகரன், மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர்.மோ.ஷர்மிளா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சங்கித் பல்வந்த் வாகே, மாவட்ட வன அலுவலர் ஜெயராஜ், மாநகராட்சி துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், வருவாய் கோட்டாட்சியர் கோவிந்தன், செய்தித்துறை இணை இயக்குநர் (நினைவகங்கள்) கு.தமிழ்செல்வராஜன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஆ.செந்தில்அண்ணா, தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், பெரிய கடைவீதி பகுதி2 செயலாளர் வி.ஐ.பதுருதீன் உள்பட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்டமன்ற தொகுதியில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் ஏற்பாட்டில் தினந்தோறும் பொதுமக்களின் குறைகளை தீர்க்கும் விதமாக குறைதீர்க்கும் வாகனத்தை குத்தாலம் மேற்கு ஒன்றியம் கங்காதரபுரம் மற்றும் திருமங்கலம் ஊராட்சியில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் தொடங்கி வைத்து மனுக்களை பெற்றுக் கொண்டார். உடன் குத்தாலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.ஆர்.ராஜா மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

விருதுநகர் வடக்கு மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 04.05.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | விருதுநகர் வடக்கு | இராஜாமணி அம்மாள் திருமண மண்டபம், மல்லாங்கிணர். |
| 06.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | சிவகங்கை | ராஜேஸ்வரி மஹால், சிவகங்கை சாலை, திருப்பத்தூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி




தலைமை கழகத்தால் புதிதாக நியமிக்கப்பட்ட கோவை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் சூலூர் அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சல்மான் நாசர், புவனேஷ், சபரிகிருஷ்ணன், மணிமாறன், உதயபூபதி, நிசாந்த், திருமலைராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் ஒன்றியச் செயலாளர்கள் கே.கே.செந்தில்குமார் கிணத்துக்கடவு மேற்கு, எஸ்.எஸ்.யுவராஜ் ஆனைமலை வடக்கு, தொண்டாமுத்தூர் கிழக்கு ஒன்றியப் பொறுப்பாளர் செல்வகுமார், மதுக்கரை நகர கழக செயலாளர் ராமு, பேரூர் கழக செயலாளர்கள் ராஜு வெள்ளலூர், கனகராஜ் கிணத்துக்கடவு, உரம் கவுதமன் சூலூர், பொதுக்குழு உறுப்பினர் நடராஜ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரபு, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் சீரபாளையம் செந்தில் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை

# திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் திண்டுக்கல் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி – திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு, தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை **திண்டுக்கல் மாநகர** அமைப்பாளர்– துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

### திண்டுக்கல் மாநகரம்

தலைவர் - வெ. இராமவர்மராஜ், 18/45, திருமலைசாமிபுரம், முதல் தெரு, திண்டுக்கல் - 624003.

துணைத் தலைவர் – ச. ரோச்விக்டர் (எ) செந்தில்குமார் 126, மேற்கு ஆரோக்கியமாதா தெரு, நாகல் நகர், திண்டுக்கல்.

அமைப்பாளர் - சி. அரப்சா 20/17, மேற்கு அசோக் நகர், திண்டுக்கல் - 624001.

துணை அமைப்பாளர்கள் – 1) அ. பொன்னுராம் 20, கிழக்கு கோவிந்தாபுரம், நாயக்கர் புது தெரு 1வது தெரு, திண்டுக்கல். 2) வீ. மணிமாறன் 46/சி, சிதம்பரனார் தெரு, சோலைஹால் பின்புறம், திண்டுக்கல். 3) த. செல்வராஜ் 53/பி, வடக்குத் தெரு, முத்தழகுபட்டி, திண்டுக்கல், 4) இ. சாகுல்ஹமீது 55, ஜமால் தெரு, பேகம்பூர், திண்டுக்கல். 5) எஸ். சிட்டிபாபு 16/176, 3வது சந்து, மேட்டுப்பட்டி, திண்டுக்கல்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 01-05-2025.

**வாகை சந்திரசேகர்**
தலைவர்,
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

## தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை

# தென்காசி வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

## தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

தென்காசி வடக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் சங்கரலிங்கம் (எ) கருணாநிதி அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **சி.சுந்தர்** (8/1, தென்றல் நகர், வாசுதேவநல்லூர், தென்காசி மாவட்டம்) அவர்கள் தென்காசி வடக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 01-05-2025.

**வாகை சந்திரசேகர்**
தலைவர்,
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

பதிவுத்துறைக்கு

# ஒரே நாளில் 272.32 கோடி ரூபாய் வருவாய்!

## அமைச்சர் பி.மூர்த்தி தகவல்!

*சென்னை, மே 4 -*

*பதிவுத்துறைக்கு ஒரே நாளில் ரூபாய் 272 கோடியே 32 லட்சம் வருவாய் கிட்டியுள்ளதாக அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.*

*30.4.2025 புதன்கிழமை அன்று அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டன.*

*பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று 30.4.2025 அன்று ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப்பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்குபதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளுடன் கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டது.*



*2024-25 ம் நிதியாண்டில் கடந்த 10.2.2025 அன்று ஒரே நாளில் 23,421 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு இதுவரையில் இல்லாத அளவில் அரசுக்கு ரூ.237.98 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. 2025-26 ம் நிதியாண்டில் இதற்கும் அதிகமாக 3042025 அன்று ஒரே நாளில் 27,440 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு இதுவரையில் இல்லாத அளவில் அரசுக்கு ரூ.272.87 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.*

*இதன்மூலம் ஒரு நாள் வருவாய் வசூலில் இதுவரை இல்லாத அளவில் அதிக வசூல் செய்து புதிய மைல்கல்லை பதிவுத்துறை எட்டியுள்ளது என வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# மிசா பி. மதிவாணன்

## மே 4 (2023)



இளம்வயதிலேயே தீவிரமாக கழகப் பணியாற்றத் தொடங்கி, கிளைச் செயலாளர், வட்டப் பிரதிநிதி, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட பிரச்சாரக்குழு உறுப்பினர், தொடர்ந்து 25 ஆண்டுகள் செம்பனார்கோவில் ஒன்றியக் கழகச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாநில விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

செம்பனார்கோவில் ஒன்றிய கவுன்சிலராகத்தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், சட்டநகல் எரிப்புப் போராட்டம், இலங்கைத் தமிழர் பிரச்சினை போராட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்டு கைதாகியதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு, காலில் விலங்கிட்டுக் கடைத் தெருவில் இழுத்து வரப்பட்டு, திருச்சி மத்திய சிறையில் ஒரு ஆண்டும் – இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மூன்று மாதம் கடுங்காவல் தண்டனையும் பெற்று சிறைவாசம் அனுபவித்தவர்.

“கழகத்துக்கு இவர் ஆற்றிய பெரும் பணிகளுக்கான அங்கீகாரமாக ‘பெரியார் விருது’ பெற்றவர். இவரது மறைவு, கழகத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். கழக வரலாற்றில் அவர் புகழ் என்றென்றும் நிலைத்து நிற்கும்” என கழகத் தலைவர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# இரா. பரமசிவம்

## மே 4 (2020)



கழகம் துவக்கப்பட்ட போதே உறுப்பினராகி, கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.

வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் பகுதியில் கிளைச் செயலாளர், ஒன்றிய பொருளாளர், மாவட்டப் பிரதிநிதி ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

தனது சொந்த வருமானத்தில் ஒரு பகுதியை எடுத்து வைத்து, இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஒவ்வொரு ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் அன்று பள்ளி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகம், பேனா, பென்சில் ஆகியவற்றை இலவசமாகக்கொடுத்து வந்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.